DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 278/2022**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 1 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. முப்புடாதி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 5th day of August 2025.

**(A1, A2 Present. )**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது அய்யாபுரம் பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன்.அய்யாபுரம் ரயில்வே கேட் அருகில் கோழிப்பண்ணை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன மாரிச்செல்வம் எனது தம்பி ஆவார். அவர்

என்னுடன் கோழிப்பண்ணையில் எனக்கு உதவியாக வேலை பார்த்துவந்தார். எனது வீட்டில் எனது அப்பா, அம்மாவுடன் நானும் எனது தம்பியும் ஒரு குடும்பமாக வசித்துவந்தோம். எனது தம்பி 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். நானும் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நானும் எனது தம்பியும் 2019 லிருந்து கோழிப்பண்ணை நடத்திவருகிறோம். எனது அப்பா, அம்மாவும் எங்களுக்கு உதவியாக கோழிப்பண்ணையில் வேலை பார்த்துவந்தார்கள்.

2) இவ்வழக்கின் 1 ம் எதிரி சரவணன் எங்கள் ஊரில் சொந்தமான ஜே.சி.பி இயந்திரம் வைத்திருந்தார். அவரது ஜே.சி.பி-யின் டயரை எனது தம்பி கிழித்துவிட்டதாக சரவணன் தென்காசி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தார். இதன் காரணமாக தென்காசி போலீசார் என் தம்பியை வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள். அதன் பிறகு எனது தம்பி ஜாமீனில் வெளியே வந்தார். அப்போது எனது தம்பியிடம் ஆஜர் எதிரி சரவணன், ஜே.சி.பி டயரை சேதப்படுத்தியதற்கு எப்போது நஷ்டஈடு கொடுப்பாய் என்று கேட்டுள்ளார். இதை எனது தம்பி என்னிடம் சொன்னார். மீண்டும் எனது தம்பியிடம் சரவணன் நஷ்டஈடு கேட்டதற்கு, நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது, அங்கே பார்த்துக்கொள்வோம் என்று சொல்லிவிட்டார். இதன் காரணமாக இரண்டுபேருக்கும் அடிக்கடி பிரச்சனை இருந்துவந்தது.

3) இந்நிலையில் கடந்த 23.04.2022 ம் தேதி மதியம் சுமார் 12.30 – 12.50 மணியளவில் அய்யாபுரத்தில் உள்ள எங்கள் வீட்டிலிருந்து கோழிப்பண்ணைக்கு எனது தம்பி அவருக்கு சொந்தமான ஹோண்டா டியோ **TN-72-BJ-6466** என்ற வாகனத்தில் முன்னால் சென்று கொண்டிருந்தார், நானும் எனது பெரியப்பா மகன் முப்புடாதி என்பவரும் ஒரு இருசக்கர வாகனத்தில் எனது தம்பியை தொடர்ந்து சென்றுகொண்டிருந்தோம். அப்போது அய்யாபுரம் தாண்டி சிறிது தொலைவில் ஸ்ரீமணக்கர உடையார் சாஸ்தா கோவில் முன்பு மதியம் 12.50 மணியளவில் சென்றுகொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி சரவணன் TN-76-AC-7923 பதிவெண் கொண்ட பல்சர் வாகனத்தில் வந்து எனது தம்பியை வழிமறித்தார். நஷ்டஈடுகேட்டால் கோர்ட்டில் பார்த்துக்கொள்வோம் என்று சொல்கிறாயா தேவிடியா மகனே என்று சரவணன் திட்டிக்கொண்டே அவரது வாகனத்தில் வைத்திருந்த அரிவாளை எடுத்து எனது தம்பியின் இடது பக்க காதில் ஓங்கி வெட்டியதில் காது தொங்கிவிட்டது. உடனே நானும் எனது பெரியப்பா மகனும் வெட்டாதே, வெட்டாதே என்று

சத்தம் போட்டோம். எதிரி சரவணன் அதை கேட்காமல் அரிவாளால் ஓங்கி எனது தம்பியின் கழுத்தில் வெட்டியபோது எனது தம்பி இடது கையால் அதை தடுத்ததில் இடது கை மூட்டு, இடது கை மணிக்கட்டு, இடது கை சுண்டுவிரல், மோதிரவிரல், கட்டைவிரல் ஆகிய இடங்களில் வெட்டுக்காயம் ஏற்பட்டு எனது தம்பி கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த என்னுடைய தம்பியை எதிரி சரவணன் வலது பக்க தோள்பட்டை, தொண்டை, கழுத்து ஆகிய பகுதிகளில் மீண்டும் வெட்டியதில் அவரது கழுத்திலிருந்து ரத்தம் வேகமாக வெளியேற தொடங்கியது. அப்போது ரோட்டின் வலது பக்கம் உள்ள மணக்கர உடையார் சாஸ்தா கோவிலில் எங்கள் ஊரை சேர்ந்த 2 நபர்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பெயர் வெங்கடேஷ் மற்றும் சதீஷ் ஆகும். அவர்கள் இருவரும் சரவணனை பார்த்து வெட்டாதே, வெட்டாதே என்று சத்தம் போட்டார்கள். நானும் எனது பெரியப்பா மகனும் சரவணனை பார்த்து வெட்டாதே என்று சொல்லிக்கொண்டே பக்கத்தில் போக முயன்றோம். அப்போது எதிரி சரவணன், பக்கத்தில் வந்தால் உங்களையும் அரிவாளால் வெட்டி கொலை செய்துவிடுவேன் தேவிடியா மகன்களா என்று மிரட்டினார். அதனால் பயந்துகொண்டு நாங்கள் பக்கத்தில் போகவில்லை. உடனே எதிரி தான் கொண்டு வந்த அரிவாளை பல்சர் பைக்கில் போட்டுக்கொண்டு வேதம்புதூரை பார்த்து போய்விட்டார். நானும் எனது பெரியப்பா மகனும் ஓடிச்சென்று எனது தம்பியை தூக்கிப்பார்த்தபோது, அவன் ரத்த வெள்ளத்தில் சுயநினைவு இல்லாமல் கிடந்தார். உடனே எனது அண்ணன் ஒரு தனியார் ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்து, எனது தம்பியை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அரசு மருத்துவர் வந்து பரிசோதித்துவிட்டு எனது தம்பி இறந்துவிட்டதாக சொன்னார்.

4) உடனே நானும் எனது அண்ணனும் தென்காசி காவல்நிலையம் சென்று நடந்த சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் எழுதியதுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். எதிரி சம்பவத்தின்போது பயன்படுத்திய அரிவாளை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னுடைய தம்பி சம்பவத்தினத்தன்று அணிந்திருந்த ஆடைகளையும் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அரிவாள்தான் ஆஜர் எதிரி சம்பவத்தின் போது பயன்படுத்தியது. அந்த **அரிவாள் சா.பொ.1** ஆகும். சம்பவதினத்தன்று ஆஜர் எதிரி ஓட்டி வந்த பல்சர் வாகனம் தற்போது நீதிமன்ற

வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அந்த **பல்சர் வாகனம் சா.பொ.2** ஆகும். எனது தம்பி சம்பவ தினத்தன்று ஓட்டி சென்ற ஹோண்டா டியோ வாகனமும் தற்போது நீதிமன்ற வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அந்த **ஹோண்டா டியோ வாகனம் சா.பொ.3** ஆகும். சம்பவ தினத்தன்று எனது தம்பி அணிந்திருந்த சிவப்பும் ஊதாவும் கலந்த நிறத்திலான **சட்டை சா.பொ.4** ஆகும், கருப்பு நிற **பேண்ட் சா.பொ.5** ஆகும். சம்பவ தினத்தன்று எனது தம்பி அணிந்திருந்த கருப்பு நிற **SKC நிக்கர் சா.பொ.6** ஆகும். என்னிடம் காட்டப்படும் சில்வர் காப்பு சம்பவ தினத்தன்று எனது தம்பி கையில் அணிந்திருந்ததுதான். அந்த **சில்வர் காப்பு சா.பொ.7** ஆகும். என்னிடம் காட்டப்படும் 2 சில்வர் மோதிரங்கள் சம்பவ தினத்தன்று எனது தம்பி கையில் அணிந்திருந்ததுதான். அந்த **சில்வர் மோதிரங்கள் சா.பொ.8 வரிசை (2 எண்ணம்)** ஆகும். எனது தம்பி சம்பவ தினத்தன்று கையில் கட்டியிருந்த **கருப்பு கயிறு சா.பொ.9** ஆகும். எனது தம்பி சம்பவதினத்தன்று கழுத்தில் அணிந்திருந்த **செயின் சா.பொ.10** ஆகும். சம்பவ தினத்தன்று எனது தம்பி அணிந்திருந்த ஒரு ஜோடி **செருப்பு சா.பொ.11** ஆகும். என்னிடம் காட்டப்படும் ஹெட்போன் எனது தம்பி பயன்படுத்தியதுதான், அந்த **ஹெட்போன் சா.பொ.12** ஆகும். எனது தம்பி அணிந்திருந்த கருப்பு நிற **உள் பனியன் சா.பொ.13** ஆகும்.

5) புகார் கொடுத்த பின்னர், நானும் எனது அண்ணனும் தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்து நின்றுகொண்டிருந்தோம். அப்போது, என்னுடைய உறவினர்கள் முப்புடாதி மற்றும் முருகேசன் ஆகியோர் சம்பவதினத்தன்று ஆஜர் எதிரி முத்துக்குமார் சரவணனிடம் செல்போனில் மாரிச்செல்வம் என்னை அதிகமாக திட்டுகிறான் என்றும் அதனால் இன்று அவனை கொன்றுவிடவேண்டும் என்றும் அய்யாபுரம் காமராஜ் சிலை அருகே பேசிக்கொண்டிருந்ததை பார்த்ததாக என்னிடம் சொன்னார்கள். அப்போது என்னுடைய தம்பிக்கு பின்னால் வாகனத்தில் முத்துக்குமார் சென்றதை பார்த்ததாகவும், என்னிடம் சொன்னார்கள். சிறிது நேரத்தில் எனது தம்பியை சரவணன் வெட்டிக்கொன்றதாக அவர்கள் கேள்விப்பட்டதாகவும் என்னிடம் சொன்னார்கள். அதன் பிறகு தென்காசி போலீசார், எனது தம்பி வெட்டுப்பட்ட இடத்தை அடையாளம் காட்டுமாறு சொன்னார்கள். நானும் எனது அண்ணனும் அந்த இடத்திற்கு போலீசாரை அழைத்து சென்று அடையாளம் காட்டினோம். அப்போது ஆய்வாளரிடம் சரவணன் எனது தம்பியை வெட்டிக்கொலை செய்வதற்கு முத்துக்குமாரும் உடந்தையாக இருந்த விவரத்தை

சொல்லி, முத்துக்குமாரின் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொண்டேன்.

6) அதன்பிறகு, நான் மீண்டும் தென்காசி அரசு மருத்துவமனை சென்ற சமயத்தில் போலீசார் எனது தம்பியின் உடலின் மீது பிரேத விசாரணை நடத்தினார்கள். அப்போது நான், எனது அண்ணன் மற்றும் எனது பெற்றோர் ஆகியோர் உடன் இருந்தோம். பிரேத விசாரணை, பிரேத பரிசோதனைக்கு பின்னர் 24.04.2022 ம் தேதி உடலை நல்லடக்கம் செய்வதற்காக எனது தம்பியின் பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) குளத்தங்கரை ரோட்டின் தென்பக்கம் அய்யாபுரம் ஊர் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்கே போகும் ரோடு, அழகப்பபுரம், வேதம்புதூர் வழியாக செங்கோட்டை பேருந்துநிலையம் அருகே சென்று சேரும் என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து கிழக்கே செல்லும் ரோடு மதுரை ரோட்டில் அய்யாபுரம் சந்திப்பில் சென்று சேரும் என்றால் சரிதான். அதிலிருந்து சிறிது தூரத்தில் ஐ.டி.முக்கு சந்திப்பு வரும் என்றால் சரிதான். அய்யாபுரம் விலக்கிலிருந்து தெற்கே ரயில்வே கேட் உள்ளது என்றால் சரிதான். அந்த ரயில்வே கேட்டின் அருகேதான் எனது கோழிப்பண்ணை உள்ளது என்றால் சரிதான். சுமார் முக்கால் கி.மீ தூரத்திற்கு எங்கள் ஊரினுள்ளே ரோடு செல்கிறது என்றால் சரிதான். ரோட்டிலிருந்து எங்கள் ஊருக்குள் இறங்கும்பகுதியில் 2 டீக்கடைகள் உள்ளன என்றால் சரிதான். அந்த ரோட்டின் மேல்பக்கம் எங்கள் ஊர் தண்ணீர் தொட்டி உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊரின் மத்தியில் ரோட்டின் கீழ்ப்பக்கம் முப்புடாதி அம்மன் கோவில், கோவில் மண்டபம் உள்ளது என்றால் சரிதான். அதனை ஒட்டிதான் கோவிலின் வடக்கே காமராஜர் சிலை உள்ளது என்றால் சரிதான். காமராஜர் சிலையிலிருந்து தெற்கே சிறிது தூரம் சென்று மேற்கே திரும்பினால் பிள்ளையார் கோவில் உள்ளது என்றால் சரிதான். காமராஜர் சிலையின் எதிர்பக்கம் ரோட்டை ஒட்டி வீடுகள், கடைகள் உள்ளன என்றால் சரிதான். காமராஜர் சிலைக்கு தெற்கே அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது என்றால் சரிதான்.

2) நான் சம்பவ தினத்தன்று எனது தம்பிக்கு பின்னால் சென்றதற்கு தனிப்பட்ட காரணம் கிடையாது என்றால் கோழிப்பண்ணைக்கு போகும் வேலை இருந்தது. காமராஜர் சிலையிலிருந்து எனது தம்பி வெட்டுப்பட்ட இடத்திற்கு 2 நிமிடத்தில் வந்துவிடலாம்

என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரி சரவணன் எனது தம்பியை மறித்தவுடன் கிழக்கு பார்த்த நிலையிலேயே எனது தம்பி வாகனத்தை நிறுத்திவிட்டார் என்றால் சரிதான். எனது தம்பிக்கு ஏற்பட்ட முதல் காயத்தின்போது அவர் இருசக்கர வாகனத்தில் அமர்ந்திருந்தாரா என்றால் இல்லை. எனது தம்பி சம்பவ இடத்திலிருந்து ஓடவில்லை என்றால் சரிதான். எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல, எதிரி திட்டியதை கேட்டு நின்று கொண்டிருந்தார். எதிரி சரவணன், பைக்கில் இருந்தபடியேதான் பேசிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். எனது தம்பியும், சரவணனும் இருந்த இடத்திலிருந்து 10 அடி தூரத்திற்கு முன்னரே நாங்கள் வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டோம்.

3) மணக்கரஉடையார் சாஸ்தா கோவிலின் தென்பக்கம் வரிசையாக தென்னந்தோப்புகள் உள்ளன என்றால் சரிதான். எங்கள் ஊரில் பெரும்பாலும் ஆண்கள் விவசாயம் செய்வார்கள் என்றால் கொத்தனார்களும் உள்ளார்கள். பெண்கள் பீடி சுற்றுவார்கள் என்றால் சரிதான். எனது தம்பிக்கு முதல் வெட்டு விழும்போது எனது தம்பி சென்ற வாகனம் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தப்பட்டிருந்தது. அய்யாபுரம் - அழகப்பபுரம் சாலையானது ஒரு இணைப்பு சாலை என்றும் அதில் அதிகமாக மக்கள் போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். இந்த சம்பவம் நடப்பதற்கு முந்தைய தினம் இரவு, இருதரப்பினர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டது என்றால் அது குறித்து நான் கேள்விப்பட்டேன், ஆனால் முழுவிவரம் தெரியாது. அருணாசலம் என்பவர் எனக்கு சித்தப்பா முறை வேண்டும். எங்கள் ஊரில் நிறைய பேருக்கு முப்புடாதி என்ற பெயர் உண்டு என்றால் சரிதான்.

4) எனது சித்தப்பா அருணாசலத்திற்கும், பொன்னுசாமி மகன் சரவணன் என்பவருக்கும் சொத்து தகராறு இருந்துவந்தது என்றால் சரிதான். பொன்னுசாமி மகன் சரவணன் என்பவருக்கும் என்னுடைய அப்பாவிற்கும் சொத்து சம்பந்தமாக ஒரு தகராறு ஏற்பட்டு அதிலிருந்து எங்களுக்கிடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். கடந்த 16.04.2022 ம் தேதி ஒரு நிலத்தகராறு ஏற்பட்டு, எனது அப்பா பொன்னுசாமி மகன் சரவணன் மீது ஒரு தென்காசி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 23.04.2022 ம் தேதி இரவு நான் ஊரில் இருந்தேனா என்றால் ஊரில் இல்லை, கோழிப்பண்ணையில் இருந்தேன். 22.04.2022 அன்று இரவு நான் கோழிப்பண்ணையில் இருந்தேன். அன்றைய தினம் இரவு 7

மணியளவில் நான் வீட்டிற்கு சாப்பிட வந்தேன் என்றால் சாப்பாட்டை வாங்கிக்கொண்டு கோழிப்பண்ணைக்கு சென்றுவிட்டேன். அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் காமராஜர் சிலை அருகே, எனது சித்தப்பா அருணாசலத்தின் மகன் முத்துமாரி என்பவர் பொன்னுசாமியின் மகன் சரவணன் மீதும், சக்தி, முப்புடாதி ஆகியோர் மீதும் தென்காசி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவுசெய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தினம் இரவு 11.30 மணியளவில் எனது சித்தப்பா அருணாசலத்தின் மீது எதிர்தரப்பினர் ஒரு புகார் கொடுத்து ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்குகள் தென்காசி காவல்நிலையத்தில் அதிகாலை 03.00 மற்றும் 04.00 மணியளவில் பதிவுசெய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இது சம்பந்தமாக அன்றைய தினம் அதாவது 23.04.2022 அன்று காலை 08.00 மணிக்கு மேல் 10.00 மணி வரை தென்காசி போலீசார் எங்கள் ஊரில் பாதுகாப்பு பணிக்கு வந்திருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அன்றைய தினம் எங்கள் ஊரில் இரு பிரிவினருக்கிடையே தகராறு இருந்துவந்ததால் கலவர சூழ்நிலை நிலவி வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5) சம்பவத்திற்கு பின்னர், என்னுடைய தம்பியை நான் தூக்கிப்பார்த்தபோது அவர் இறந்துவிட்டார் என்றும் அதனால் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி வரவழைத்ததாகவும் புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் எனது தம்பியின் உடல் சென்ற ஆம்புலன்சை பிணவறை பகுதியில் நிறுத்தினோம் என்றால் சரிதான். ஆம்புலன்சிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் எனது அண்ணன் முப்புடாதிதான் தகவல் சொன்னார். வந்தது 108 ஆம்புலன்ஸ் கிடையாது என்றால் சரிதான். தனியார் ஆம்புலன்ஸ்தான் வந்தது. ஆம்புலன்சில் வந்த ஊழியர்கள் சம்பவ இடத்தில் எனது தம்பியின் பிரேதத்தை பார்த்து என்ன நடந்தது என்று கேட்டார்கள் என்றால் சரிதான். அந்த ஆம்புலன்ஸ் தென்காசியில் உள்ள ஆம்புலன்ஸ் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

6) புகார் கொடுத்தப்பின்னர், போலீசார் எப்போது மருத்துவமனைக்கு வந்து உடலை பார்த்தார்கள் என்று எனக்கு நினைவில்லை. மருத்துவமனையிலிருந்து மதியம் 01.30 மணிக்கு மேல் கிளம்பி நேரே காவல்நிலையம் சென்றேன், காவல்நிலையத்திற்கு வெளியே உள்ள ஒரு கடையில் பேப்பர் வாங்கி புகாரை நான் எழுதிக்கொடுத்தேன். தென்காசி மேம்பாலத்தின் வடக்கு பகுதியில் தென்காசி அரசு மருத்துவமனை உள்ளது என்றால்

சரிதான். மேம்பாலத்தின் கீழே தென்பக்கம் தென்காசி காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். புகாரை எழுதி எடுத்து சென்றால்தான் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று எனக்கு தெரியும், எனவே புகாரை எழுதியே காவல்நிலையத்திற்கு எடுத்துசென்றேன். இந்த சம்பவம் கேள்விப்பட்டு எனது பெற்றோர் மற்றும் உறவினர்கள் தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோரிடமும் உறவினர்களிடமும் நடந்த சம்பவம் குறித்து நான் கூறினேன் என்றால் சரிதான். அரசு மருத்துவமனைக்கு சாட்சி முப்புடாதி மற்றும் முருகேசன் ஆகியோர் மற்ற உறவினர்களுடன் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

7) நான் புகார்மனுவை எழுதுவதற்கு முன்னர் கொலை நடந்த பதட்டத்தில் நேரே காவல்நிலையம் சென்று சம்பவம் குறித்து சொன்னேனா என்றால் இல்லை. புகார் தெளிவாக நிறுத்தி நிதானமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய கையொப்பம் தெளிவற்ற முறையில் மேலே உள்ள கையெழுத்திற்கு மாறாக உள்ளது என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் உள்ள மகளிர் போலீசாரால் மேற்படி புகார் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எனது தம்பி 12.50 மணியளவில் நடந்த சம்பவத்தில் கொல்லப்படவில்லை என்றும், அவர் 12.00 மணியளவிலேயே அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார் என்றும், போலீசாருக்கு தகவல் கிடைத்து போலீசார் சம்பவ இடம் வந்து சம்பவ இடத்தில் இறந்த சடலம் கிடந்த நிலையிலேயே ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார் என்றும், அப்போது அவரிடம் அடையாளம் தெரியாத நபர் தாக்கியதாக எங்கள் ஊர்க்காரர்கள் புகார் கொடுத்தார்கள் என்றும், அதை மறைத்து தற்போது புகார் காலதாமதமாக இரவு 07.00 மணிக்கு மேல் நாங்கள் கலந்து ஆலோசித்து எங்களுக்கு எதிரிகளின் குடும்பத்தின் மீதிருந்த விரோத்தின் காரணமாக பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தம்பி எங்கள் வீட்டிலிருந்து கோழிப்பண்ணைக்கு போகும்வழியில் தாக்கப்பட்டு இறந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது தம்பிக்கு பின்னால் பைக்கில் சென்றதாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு செல்லாத காரணத்தினால்தான் நான் சென்ற வாகனத்தின் விவரங்களை என்னால் நீதிமன்றத்தில் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. நானும் என்னுடைய அண்ணனும் சென்ற வாகனத்தை போலீசார் ஆய்வு செய்து விசாரித்தார்களா

என்பது எனக்கு நியாபகமில்லை.

8) என்னிடமும், முப்புடாதியிடமும் ஒரு கையெழுத்தை மட்டும் வாங்கிக்கொண்டு பின்னிட்டு அதில் புகார் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் புகாரில் உள்ள சங்கதிகள் நெருக்கமாக சுருக்கி எழுதப்பட்டுள்ளது என்றும், அந்த புகாரில் உள்ள கையெழுத்திற்கும் என்னுடைய கையொப்பத்திற்கும் வித்தியாசம் காணப்படுகிறது என்றும் சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் சம்பவ இடத்தில் பிரேதத்தை கண்டபின்னர், அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் பேரில்தான் மதியம் 03.05 மணிக்கு பிரேதம் பிணவறையில் பாதுகாக்கப்பட்டது என்றால் சரியல்ல. கண் கண்ட சாட்சியாக என்னை வைத்து பொய்யான புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய தம்பி வெட்டுப்பட்டு கிடந்த இடத்தில் நிறைய ரத்தம் வெளியேறி ஆடைகளில் ரத்தக்கறை தோய்ந்து காணப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தம்பியை, நானும் எனது அண்ணனும் உயிர் உள்ளதா என்று தூக்கிப்பார்த்தோமா என்றால் தூக்கிப்பார்த்தோம். அப்போது எங்கள் உடைகளில் ரத்தம் படவில்லை, கைகளில் மட்டுமே ரத்தம் பட்டது. சம்பவம் நடந்தவுடன் எனது தம்பி உடலிலிருந்து ரத்தம் பீறிட்டுவந்ததா என்றால் சாதாரணமாக வந்தது.

9) சம்பவதினத்தன்று நான் கட்டம் போட்ட வெள்ளை சட்டை அணிந்திருந்தேன் என்றால் சரிதான். எனது அண்ணன் முப்புடாதி என்ன நிறம் ஆடை அணிந்திருந்தார் என்று எனக்கு நினைவில்லை. போலீசார் சம்பவ இடத்தை காட்ட சொன்னபோது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது என்றால் சரிதான். எனது தம்பி இறந்த செய்தி அனைத்து நியூஸ் சேனல்களிலும் வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள ஜீப், காவல் ஆய்வாளர் வந்த ஜீப் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் வெட்டுப்பட்டு கிடப்பது என்னுடைய தம்பியின் உடல் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பிரேதம் இருப்பதை குறித்துக்கொண்டு பெறப்பட்ட புகாரினை மறைத்துவிட்டு, பிரேதத்தை ஆம்புலன்சில் தென்காசி மருத்துவமனை எடுத்து சென்று நான் புகார் கொடுத்த பின்னர் போலீசார் சம்பவ இடம் வந்ததாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் **புகைப்படங்கள் (2 எண்ணம்) எ.த.சா.ஆ. 1 வரிசை** ஆகும். (அரசு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில்

மேற்படி புகைப்படங்கள் குறியீடு செய்யப்படுகிறது) பொன்னுசாமி மகன் சரவணனுக்கும் என்னுடைய சித்தப்பா அருணாசலம் மற்றும் என்னுடைய தகப்பனாருக்கிடையே இருந்த விரோதம் காரணமாக ஏற்பட்ட கலவரத்தில் என்னுடைய தம்பி காயம்பட்டார் என்றும், காயம்பட்ட விவரம் எங்களுக்கு தெரியாத காரணத்தினால் என்னால் பின்னிட்டு பொய்யாக ஒரு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10) கொலை சம்பவம் நடப்பதற்கு 11 நாட்களுக்கு முன்னர் என்னுடைய தம்பி மாரிச்செல்வம், எங்கள் பகுதியில் உள்ள ஒரு பள்ளி சிறுமி சக்தி பானு என்பவரிடம் தவறாக நடக்க முயற்சி செய்து, அந்த பெண்ணின் தாயார் அருணா அதை கண்டித்ததால் அவரை என்னுடைய தம்பி 12.04.2022 ம் தேதி வழிமறித்து ஆபாசமாக பேசி, தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக என் தம்பியின் மீது தென்காசி காவல்நிலைய குற்ற எண்.213/2022 வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு நியாபகமில்லை. அதன் காரணமாக அருணாவின் குடும்பத்திற்கும் எனது தம்பியின் மீது விரோதம் இருந்துவந்தது என்றால் சரியல்ல.

11) நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல், எனது தம்பியை சரவணன் வழிமறித்தார் என்றும், அரிவாளால் தாக்கி கொலைசெய்தார் என்றும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரி சரவணனை போலீசார் பிடித்துவிட்டார்கள் என்று சம்பவத்திற்கு மறுநாள் காலையில்தான் எனக்கு தெரியும். ஆய்வாளர்தான் மேற்படி விவரத்தை எங்களுக்கு சொன்னார். ஜே.சி.பி-யின் டயர் சேதப்படுத்தப்பட்டது சம்பந்தமாக ஏற்கெனவே இழப்பீடு கொடுப்பது சம்பந்தமாக எங்களுக்கிடையே பிரச்சனை பேசி முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது எனது தம்பிக்கும், சரவணனுக்கும் இடையே எந்தபிரச்சனையும் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. சதீஷ், வெங்கடேஷ் ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. போலீசாருக்கு முதன்முதலில் எனது தம்பி வெட்டுப்பட்டு கிடந்த விவரத்தை சதீஷ் மற்றும் வெங்கடேஷ்தான் சொன்னார்கள் என்றால் சரியல்ல.

**<u>2 ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவதினத்தன்று எனக்கோ, என்னுடைய அண்ணன் முப்புடாதிக்கோ காயம் இல்லை என்று சொன்னால் சரிதான். வாகனத்தை வைத்து மோதியோ அல்லது அருகிலிருந்த கல், கட்டைகளை தூக்கி எறிந்தோ என்னுடைய தம்பியை காப்பாற்ற முயற்சி

செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் எங்கள் வீட்டிலிருந்து கோழிப்பண்ணைக்கு செல்லும் வழியில் சம்பவ இடத்தை தவிர வேறு எங்கும் நிற்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய தம்பியை அழைத்து சென்ற ஆம்புலன்ஸ் வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. பொதுவாக, இப்படி ஒரு சம்பவம் நடந்ததால் உடனடியாக போலீசுக்கு தகவல் சொல்லவேண்டும் என்றால் பதட்டத்தில் எனக்கு சம்பவ தினத்தன்று தோன்றவில்லை. வெட்டி கொலை செய்ததாக சொல்லப்படும் சரவணனை கைது செய்ய நான் போலீசாருக்கு போன் செய்தேனா என்றால் இல்லை.

தென்காசி அரசு மருத்துவமனையில் வந்து நிற்கும்போது எங்கள் உறவினர்கள் முப்புடாதி மற்றும்முருகேசன் ஆகியோர் சம்பவத்தன்று ஆஜர் எதிரி முத்துக்குமார் செல்போனில் சரவணனிடம், மாரிச்செல்வம் என்னை அசிங்கமாக திட்டுகிறான், அதனால் அவனை உயிரோடு விடக்கூடாது கொன்றுவிடவேண்டும் என்று அய்யாபுரம் காமராஜர் சிலை பக்கம் பேசிக்கொண்டிருந்ததை பார்த்ததாக என்னிடம் சொன்னார்கள் என்றும் என் தம்பி வாகனத்தின் பின்னாலேயே முத்துக்குமார் சென்றதை பார்த்ததாகவும் என்னிடம் சொன்னார்கள் என்ற விவரத்தை நான் புகாரிலோ அல்லது போலீஸ் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் போலீஸ் விசாரணையில் சொன்னேன். நான் முதல் விசாணையில் சொன்னதுபோல், 23.04.2022 அன்று நான் எங்கள் வீட்டிலிருந்து எனது தம்பி ஒரு வாகனத்திலும், நானும் எனது அண்ணனும் ஒரு வாகனத்திலும் கோழிப்பண்ணைக்கு போனதாக சொல்வதும், அப்போது சம்பவம் நடந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அய்யாபுரம் விலக்கிலிருந்து மேற்கு நோக்கி வரும்போதுதான், எனது தம்பி இனம்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு இறந்தார் என்றும், அவர் தாக்கப்பட்ட சம்பவம் யாருக்குமே தெரியாது என்றும், பின்னால் எங்களை சாட்சியாக புகுத்தி இந்த வழக்கு அன்று மாலை 6 அல்லது 7 மணிக்கு மேல் பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2ம் எதிரி முத்துக்குமாருக்கும் எனது சித்தப்பா அருணாசலத்திற்கும் உள்ள விரோதத்தின் காரணமாக அவரது ஏற்பாட்டில் முத்துநாடார் மகன் முப்புடாதியை பொய்யாக சாட்சியாக புகுத்தி அவரை இந்த வழக்கில் பின்னால் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது போலீசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi